# பாலினம் பள்ளி மற்றும் சமுதாயம்

Gender: Meaning and definition - Difference between gender and sex - Gender roles in society: family, caste, class, religion, culture, the media and popular culture, law and the state (film, advertisements, songs, etc) - Reasons for gender inequalities - Gender-just education outside school settings.

## அலகு – 1 சமூகத்தில் பாலின பங்கு பணிகள்

**பாலினம் - பொருள் (**Gender : Meaning)

ஒருவரை ஆணாகவோ பெண்ணாகவோ சமூகரீதியாக அடையாளப்படுத்துவது பாலினம் ஆகம்.

**பால் - பொருள் (**Sex : Meaning)

பால் என்பது உயிரியல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகும். இது உடற்கூறு அடிப்படையில் அறியப்படுவது. பிறப்பால் அமைவது.

**பால் - வரையறை** (Gender- definition)

பால் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உடலியல் பூர்வமாக இருக்கும் இயற்கையான வேறுபாடுகளைக் குறிப்பது – தேவதத்தா

**பாலினம் - வரையறை (**Sex- definition)

பாலினம் என்பது சமுதாய அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் விதிக்கப்பட்டுள்ள பங்குகள் பண்பாடுகள் இயல்புகள் இவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் வேறுபாடுகளைக் குறிக்கும் - செரிஸ் கிராமரே

**பால், பாலினம் வேறுபாடு** (Difference between gender and sex)

| வ. எண் | பாலினம் | பால் |
|---|---|---|
| 1. | இது சமூகத்தால் உருவாக்கப்பட்டது | இது உயிரியல் அடிப்படையில் அமைவது |
| 2. | ஆண்மை அல்லது பெண்மைக்குரிய அகவயமான மன உணர்வுகளைக் குறிக்கிறது | இது உயிரியல் அடிப்படையிலான உடல்ரீதியான ஆண் அல்லது |

| | | |
|---|---|---|
| | | பெண்களின் இயற்கை உணர்வைக் குறிக்கிறது |
| 3. | பாலின பாகுபாடுகள் இல்லாமல் ஒரு தனி நபர் ஆண்மை அல்லது பெண்மை குணங்களை தன்னடையாளமாகக் கருதலாம் | இவை ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியானவை |
| 4. | இது சமூகத்தில் ஒரு தனிநபரால் கற்றுக்கொள்ளப்படுவது | இது இயற்கையானது |
| 5. | இது தனிநபரின் சமூக கலாச்சாரம் மற்றும் உளவியல் சார்ந்த குணமாகும் | இது ஆண் மற்றும் பெண்ணின் உடற்கூறினை மட்டும் சார்ந்ததாகும் |
| 6. | பாலினம் ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்தில் வேறுபடுகிறது | இது எல்லாச் சமூகத்திலும் ஒரேமாதிரியானது. |
| 7. | இது வரலாற்றுரீதியாக மாறுபடுகிறது | இது எல்லா வரலாற்றுக் காலத்திலும் ஒன்றே |
| 8. | இதனை இருபாலரும் செயல்படுத்தலாம் | குறிப்பிட்ட பாலினத்தவரால் மட்டுமே இதைச் செயல்படுத்த இயலும் |

**குடும்பத்தில் பாலின பங்கு பணிகள்** (Gender roles in society: family, caste, class, religion, culture, the media)

சமூக பாலினத்தவரின் பங்கேற்பு என்பது ஆண்மை அல்லது பெண்மைக்குரிய நடத்தைகளை மதிப்பிடுவதாகும்.

**பெண்கள்:**

மனையியல், குடும்ப மேலாண்மை, கவின்கலைகள் , கைத்தொழில்களில் ஈடுபாடு கொள்ளுதல் , தன்னம்பிக்கை, இறைவழிபாடு, விருந்தோம்பல் போன்ற பண்புகள் பெண்களுக்குரியவை.

**ஆண்கள்**

துணிவு, தலைமைப்பண்பு, பொருளீட்டும் திறன் , உயர்கல்வியும் பயிற்சியும் , குடும்பத்தைக் காக்கும் பொறுப்புணர்வு, சிக்கல்களை எதிர்கொள்ளும் மனவலிமை போன்ற பண்புகள் ஆண்களுக்குரியவை.

**சாதியில் பாலினத்தின் பங்கு**

1. தொழில் அடிப்படையில் அமைந்த சாதிப்பிரிவுகள் நாளடைவில் பிறப்பின் அடிப்படையில் தலைதூக்கியுள்ளது.
1. ஒவ்வொரு பாலினத்தவரின் திருமணம் உணவு உடை பழக்கவழக்கங்கள் போன்றவற்றை சாதி அமைப்புகள் தீர்மானிக்கின்றன.
2. மேல்சாதியின் ஆண் பாலினத்தவர்கள் கீழ்சாதியின் பெண் பாலினத்தவர்களை தங்களது பாலுணர்வுக்குரிய பொழுதுபோக்கு பொருளாகவே கருதும்நிலை நிலவுகிறது.
3. கிராமப்புறங்களில் மேல்சாதியினர் விவசாயக்கூலிகளாகவே செயல்பட்டு வருகின்றனர்

**வகுப்புப் பிரிவில் பாலினத்தின் பங்குகள்**

பொருளாதாரம் சமூக சமய அந்தஸ்து வாழ்க்கைத்தரத்தைப் பொறுத்தும் அரசியல் செல்வாக்கைப் பொறுத்தும் தனிநபரையோ அல்லது சமூகக்குழுக்களையோ படிநிலை அடுக்கமைவாகப் பிரிக்கலாம். இவ்வாறு பிரிக்கப்படும் பிரிவுகள் **வகுப்பு** அல்லது **வர்க்கம்** எனப்படும்.

மக்களை அடுக்குவரிசைப்படி பிரித்திடும் சாதி அமைப்பை இந்திய சமுதாயம் பின்பற்றுகிறது. தரஅடுக்கு நிலைகள் கொண்ட சாதி அமைப்பே மக்களுக்கு அதிகாரம் சமூக அந்தஸ்து சமூக அடையாளம் ஆகியவற்றை அளிக்கிறது.

**சமூகத்தில் உள்ள பாலின பங்கு பணிகளும் சமயமும்**

1. மதங்கள் ஆண்களை குடும்பத்திற்கு தேவைப்படும் பொருளீட்டுபவராகவும் பெண்களை குடும்பத்தை நிர்வகிப்பவராகவும் கருதுகின்றன.
1. சமயங்கள் சமூகத்தில் பாலின நடத்தைக் கோலங்களையும் பாலின உறவுகளையும் நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன.
2. மதம் சார்ந்த நெறிமுறைகளில் பெண்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் மற்றும் அதிக பொறுப்புகள் தரப்படுகின்றன

**பாலின பங்கு பணிகளும் பண்பாடும்**

1. பண்பாடு என்பது ஒரு சமூகப்பிரிவினரது வாழ்வியல் முறையைக் கட்டமைத்திடுகிறது.
2. ஒரு சமூகப்பிரிவினர் தமக்குள் பகிர்ந்து கொள்வதோடு அடுத்த

தலைமுறையினருக்கும் கடத்தும் அனைத்துமே பண்பாடு என்பதில் அடங்கும்.

3. பாலின பங்கு பணிகள் பண்பாட்டினால் உருவாக்கப்படுகின்றன.
4. பாலின அடையாளங்களும் பாலின உறவுகளும் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன.

**சமூகத்தில் பாலின பங்குபணிகளும் சட்டமும்**

1. இந்தியக் குடியரசு சட்டத்தின் படிசட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் இனம் மொழி பால் மதம் போன்றவற்றால் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது என்றும் கூறியுள்ளது. (சட்டப்பிரிவு 14)
1. பெண்களுக்கு எதிராக அரசு வேற்றுமை பாராட்டக்கூடாது சட்டப்பிரிவு 15(1)
2. பெண்களுக்கு பெற்றோர் சொத்தில் சமபங்கு உண்டு (இந்திய வாரிசு உரிமைச்சட்ட திருத்தம் 2002)
3. வரதட்சணை கேட்பதும் பெறுவதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும் (வரதட்சணை தடைச்சட்டம் 1961)
4. வெவ்வேறு சாதிகள் மதங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களிடையே திருமணம் செய்து கொள்வதில் தடையில்லை (சிறப்பு திருமணச்சட்டம் - 1954)
5. குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் சிறப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தித்தருவதற்கான சட்டப்பிரிவு 15(3)

**ஊடகம் , பாடல் , விளம்பரம் மற்றும் படத்தில் பாலின பங்கு பணிகள்:**

- ஊடகங்களில் பாலின பங்கு பரவலாக இருக்கிறது. பெண்களை பாலூட்டும் தாயாகவும் , மென்மையான தேற்றத்துடனும், கூட்டுணர்வுமிக்கவர்களாகவும் மற்றவர்களுக்கு உதவும் மனிதர்களாகவும் கருதப்படுகிறார்கள்.
- கணினிகள் பற்றி விளம்பரங்களில் பொதுவாக ஆண்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்தவது போல் சித்தரிக்கப்படுகின்றனர்.
- பெண்களை வெறும் பார்வையாளர்களாகவோ, அழகாகவோ ஊடகங்கள் சித்தரிக்கின்றன. ஊடகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே தொழில் போட்டி சமமற்றதாக உள்ளது.

- திரைப்படங்களிலும் , பாடல்களிலும் பெண்களை

  விரும்பத்தக்க, இரக்கமுள்ள, கீழ்படியும் தன்மை, செயலற்ற மற்றும் பலவீனமாக உள்ளவர்களாக காட்டப்படுகிறார்கள் ஆனால் ஆண்களை கடின உழைப்பாளிகள் போலவும் உடலளவில் வலிமை மிக்கவர்களாகவும் அறிவுரை பகர்பவராகவும் ஊடகமும் திரைப்படங்களும் பாலின சமத்துவமின்மையை உருவாக்குகின்றன.
- மேலும் பெண்கள் பாசம் பகிர்வு விட்டுக்கொடுத்தல் போன்ற உணர்ச்சிவசப்பட்டவர்களாகவும் மற்றவர்களுக்கு அடிபணிந்து அழுது வாழ்பவர்களாகவும் சித்தரிக்கப்டுகிறார்கள்.
- மாறிவரும் உலகில் சமுதாயம் கூடுதலாக வன்முறை மற்றும் சீரழிவு அல்லது ஆபாச ஊடகப்பொருட்கள் எதிர்மறைாக மாறி பெண்களை அதிகமாக பாதிக்கின்றன.

**பாலின சமத்துவமின்னமை**

பெண்களை பால் பிரிவின் அடிப்படையில் ஆண்களுக்கு சமமாகக் கருதாமல் தாழ்ந்த பிரிவினராக எண்ணி வேற்றுமை பாராட்டுதல் ஆகும்.

**பாலின சமத்துவமின்மைக்கான காரணங்கள்** (Reasons for gender inequalities)

1. பாலின தப்பெண்ணங்கள் மற்றும் பாலின பொறுப்புகள்
1. தந்தை வழியாக வம்சாவழி அறியும் முறை
2. ஏழ்மை
3. எழுத்தறிவின்மை
4. வேலை பெறும் வாய்ப்புகள் இல்லாதிருத்தல்
5. சமூகமரபுகள் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள்
6. மக்களின் சமூக மனப்பான்மை
7. பெண்களிடையே விழிப்புணர்வு இன்மை

**பாலின சமத்துவமின்மையைப் போக்கும் வழிமுறைகள்**

1. மக்களிடையே அரசு கொள்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
1. சமுதாயத்தில் பாலினம் குறித்த குறுகிய சமூகப்பார்வையை சமூக ஆர்வலர்களின் துணை கொண்டு அகற்றுதல்

2. இருபாலர் பயிலும் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்குவதற்கு அரசு சிறப்பு முன்னுரிமையும் ஊக்கமும் வழங்குதல்
3. பெண்களுக்கு பொது இடங்களில் பாதுகாப்பும் அடிப்படை வசதிகளையும் செய்து தருதர்
4. பெண்கள் பணிபுரியும் இடங்களில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பும் தகுந்த வேலைச்சூழலையும் ஏற்படுத்தித்தருதல்

**வகுப்புச் சூழலுக்கு வெளியே இருபாலினங்களுக்கும் பொருந்தும் நியாயமான கல்வி:** (Gender-just education outside school settings)

1. பாலின சமத்துவத்தை ஏற்படுத்திட பெரிய அளவில் சமூக மாற்றம் ஏற்பட மக்களின் மனப்பான்மைகள் நம்பிக்கைகள் மரபுவழி பழக்கங்களில் தகுந்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.
1. இரு பாலின மாணவர்களும் தங்கள் தனித்திறன்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுதலும் வெளிநிறுவனங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்துகொள்வதும் அவர்களது மனப்பான்மையை விரிவடையச் செய்யும்.
2. மலைவாழ் பெண்கள் மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு முறைசாராக்கல்வி மூலம் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது அறிவினை விரிவு செய்ய வேண்டும்.
3. சமூகமயமாக்கல் மூலம் சமூகத்தில் நிலவும் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் சட்டதிட்டங்களையும் அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ள குழந்தைகளை தயார் செய்வது சிறந்த பலனை அளிக்கும்
4. பாலின சமத்துவம் மாறிவரும் பாலின பங்குபணிகள் ஆகியவை குறித்த மனப்பான்மையை மாணவர்களிடம் உருவாக்கிட பள்ளிக்கு வெளியே உள்ள முறைப்படுத்தப்பட்ட சூழல்களான களப்பயணம், ஆய்வு மேற்கொள்ளல், ஊடக நிகழ்ச்சிகள் மூலம் கல்வி புகட்டுதல் போன்ற வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.